வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண்.4312 /ஆ4/2022 நாள்: .02.2023

பொருள்: தேர்வுகள்- வேலூர் மாவட்டம் - பத்தாம் வகுப்பு , மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்வு, மார்ச்/ஏப்ரல் -2023-பொதுத்தேர்வு -அறைக் கண்காணிப்பாளர் தேர்வு -குலுக்கல் முறையில் (lot System ) -தேர்வு மையங்களாக செயல்படும் பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் -வருகை புரிய தெரிவித்தல் -சார்பு

=========

மேற்காணும் பொருள் சார்பாக அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் அறிவுரைகளின் படி நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் -2023 பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்விற்கு அறைக் கண்காணிப்பாளர் தேர்வு குலுக்கல் முறையில் (LOT SYSTEM) தேர்வு செய்யப்பட உள்ளதால் பத்தாம் வகுப்பு , மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு செயல்படும் பள்ளியின் தலைமையாசிரியர்கள் மற்றும் தனிதேர்வர்களுக்கான தேர்வு மைய பள்ளித் தலைமையாசிரியர்களும் (இணைப்பு பள்ளி தலைமை ஆசிரியர்கள் தவிர்த்து) வருகை புரிந்து தங்கள் தேர்வு மையங்களுக்கு தேவையான அறை கண்காணிப்பாளர்களை தேர்ந்தெடுக்க கீழ்கண்ட அட்டவணைப்படி தேர்வு மைய தலைமையாசிரியர் வருகைப் புரிய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**<u>இடம் : அரசு முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி,வேலூர் .</u>**

**<u>நாள் : 27.02.2023 பி.ப</u>**

| வ.எண் | நேரம் | ஒன்றியம் |
|---|---|---|
| 1. | 2 மணிக்கு | குடியாத்தம்,பேர்ணாம்பட்டு |
| 2. | 3 மணிக்கு | அணைக்கட்டு ,கணியம்பாடி |
| 3. | 4 மணிக்கு | காட்பாடி, கே.வி.குப்பம் |
| 4 | 5 மணிக்கு | வேலூர் நகர்/புறநகர் |

குறிப்பு : தேர்வுமையமாக செயல்படும் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியின் பிப்ரவரி 2023- க்குரிய ஆசிரியர் வருகை பதிவேடு நகல் மற்றும் இணைப்பு பள்ளிகளைக் கொண்ட தேர்வு மைய தலைமை ஆசிரியர்கள் தங்கள் தேர்வு மையத்தில் இணைப்பு பள்ளிகளாக செயல்படும் பள்ளிகளில் இருந்து ஆசிரியர் வருகை பதிவேட்டின் நகலையும் கொண்டுவருமாறு மீள தெரிவிக்கப்படுகிறது.

ஓம்.க.முனுசாமி
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்.

பெறுநர்:
தேர்வுமையமாக செயல்படும் அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள் ,வேலூர் மாவட்டம்.

நகல் :

வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் /தொடக்கக்கல்வி) தகவலுக்காகவும்,தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பாலகிறது.